தீயணைப்பு-மீட்புப்பணித்துறை, சிவகங்கை மாவட்டம்,
மாவட்ட அலுவலர் அவர்களது செயல்முறை ஆணைகள்.
பிறப்பிப்பவர்: திரு.ப.சத்தியகீர்த்தி, எம்.எஸ்சி

ந.க.எண்: 4202/ஆ/2022 நாள்: 20.12.2022
ப.ஆ.கோப்பு எண்:67/2022

பொருள்: தீயணைப்பு-மீட்புப்பணிகள் துறை - சிவகங்கை மாவட்டம் - சிவகங்கை மாவட்ட அலுவலர் அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் இளநிலை உதவியாளர் திரு.பெ.வேல்முருகன் என்பவரது பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல்.

பார்வை:
1. 26.12.2020 நாளிட்ட அரசாணை (நிலை) எண்:523 உள் (காவல்-17) துறை.
2. 05.01.2021 நாளிட்ட இயக்கக குறிப்பாணை ந.க.எண்:14023/ஆ4/2021.
3. 07.11.2022 நாளிட்ட இயக்கக குறிப்பாணை ந.க.எண்:18272/ஆ4/2021 உடன் பெறப்பட்ட அரசு கடிதம் எண்:16590/Police-XVII/2022-6 நாள்:21.10.2022.

- - - - - -

பார்வை 1-ல் காணும் அரசாணையின்படி, சிறப்பு நேர்வின் அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திரு.பெ.வேல்முருகன் என்பவருக்கு பணி நியமனம் வழங்குமாறு அறிவிப்பு வெளியிட்டதன்பேரில், தமிழ்நாடு தீயணைப்பு-மீட்புப்பணித் துறை இயக்குநர் அவர்களால் பார்வை 2-ன்படி பணிநியமனம் வழங்கப்பட்டு 01.02.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 3-ல் காணும் அரசு கடிதத்தில் தீயணைப்பு-மீட்புப்பணித் துறையின் பணி நியமன அலுவலரே திரு.பெ.வேல்முருகன், இளநிலை உதவியாளர் என்பவரது பணியினை வரன்முறை செய்து கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதன்படியும், இயக்கக குறிப்பாணையிலும் தெரிவித்துள்ள அறிவுரையின்படியும், மேற்காணும் பணியாளரின் பணியினை அவர் பணிக்கு அறிக்கை செய்த நாளான 01.02.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணைகள்:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்வு அறிவிப்பின் அடிப்படையில் பார்வை 1-ல் காணும் அரசாணையின்படி, திரு.பெ.வேல்முருகன் என்பவர் இளநிலை உதவியாளராக 01.02.2021 முற்பகல் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார். அவரது பணியினை நியமன அலுவலரே பணிவரன்முறை செய்து கொள்ளலாம் என பார்வை 3-ல் காணும் அரசு கடிதத்தில் அறிவுரை வழங்கப்பட்டுள்ளதன்படியும், இயக்கக குறிப்பாணையில் தெரிவித்துள்ள அறிவுரையின்படியும், இளநிலை உதவியாளரான திரு.பெ.வேல்முருகன் என்பவர் பணிக்கு அறிக்கை செய்த நாளான 01.02.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மாவட்ட அலுவலர்
தீயணைப்பு-மீட்புபணிகள் துறை,
சிவகங்கை மாவட்டம்,
சிவகங்கை

20/12/22

பெறுநர்: திரு.பெ.வேல்முருகன், இளநிலை உதவியாளர், மாவட்ட அலுவலகம், சிவகங்கை மாவட்டம்.

நகல்: இயக்குநர், தீயணைப்பு மீட்புபணிகள் துறை, எழும்பூர், சென்னை.